# இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

UAN.TN03D0061112

## பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

## International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:4 இதழ்:14 ஆகஸ்ட் 2018 Vol. 4 Issue : 14 August 2018





சி.சங்கீதா
பா.ஈஸ்வரன்
ச.கண்ணதாசன்
அரி.வே.விஸ்வேஸ்வரன்
இரா.வசந்தமணி
தி.மல்லிகா
கி.ரேவதி

பா.கலையரசி
அ.மரிய செபஸ்தியான்
சி.அம்சவேணி
சே.முனியசாமி
ஆ.ஈஸ்வரன்
க.பாலாஜி
ந.இராஜேந்திரன்

ம.பாபு
தி.நிரஞ்சனி
இரா.அருணா
சி.சாவித்ரி
அ.அனேஜா
வி.வசந்தா
ப.சண்முகராணி
த.சத்தியராஜ்

Inam ISSN : 2455 - 0531

UAN.TN03D0061112

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
*An Internationally Refereed e_ Journal of Tamil Studies*

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## இதழாக்கமும் வெளியீடும்

*முனைவர் த.சத்தியராஜ்*
கோயமுத்தூர்
*09600370671*
*inameditor@gmail.com*
*www.inamtamil.com*

ஆகஸ்ட் 2018 மலர் : 4 இதழ் : 14
*August 2018 Volume IV Issue 14*

# உள்ளே ...

**தமிழ்ச் செவ்வியல்**

**தொல்காப்பியமும் திருக்குறள் களவியலும்**
முனைவர் சி.சங்கீதா | 4

**ஐங்குறுநூற்றில் மலர்கள் வருணனை**
முனைவர் பா.ஈஸ்வரன் | 9

**பத்துப்பாட்டுப் பதிப்புருவாக்கத்தில் உ.வே.சாமிநாதையர்**
முனைவர் ச.கண்ணதாசன் | 13

**வேதசாத்திரங்களின் கருத்துகள் திருக்குறளின் அடிப்படையில் திரிக்கப்பட்டவையே**
அரி.வே.விஸ்வேஸ்வரன் | 18

**பழங்காலத் தமிழர் வாழ்வியலும் அறிவியல் பொருட்புலங்களும்**
முனைவர் வசந்தமணி இராமலிங்கம் | 24

**புலிகொல் யானை**
முனைவர் தி.மல்லிகா | 34

**சங்கத் தமிழரின் நிமித்தம் சார்ந்த நம்பிக்கைகள்**
கி.ரேவதி | 37

**பக்தி இலக்கியம்**

**திருமூலரின் இரந்தார்க்கீதல்**
முனைவர் பா.கலையரசி | 41


**தற்கால இலக்கியம்**

**தீர்ந்த சுனை, காய்ந்த பனை, நேர்ந்த வினை - ஒத்திகை விஜய்யின் "மாள்வுறு நாடகம்" : பார்வையாளர் நோக்கு**
முனைவர் அ.மரிய செபஸ்தியான் | 45

**பெண்மொழியும் பண்பாட்டுக் கூறுகளும்**
முனைவர் சி.அம்சவேணி | 54

...

**UGC APPROVED JOURNAL NO: 64244**


IIJIF
INTERNATIONAL INNOVATIVE JOURNAL IMPACT FACTOR
DOI: 03-MAR-2018
REF.NO.: IIJIF180301
office@iijif.com
https://iijif.com/
This certicate is valid for 1 year from the date of issue

CERTIFICATE
OF INDEXING AND JOURNAL IMPACT FACTOR [2017-18]
THIS CERTIFICATE IS PRESENTED TO
Inam: International E-Journal of Tamil Studies
e-ISSN: 2455-0531
The above journal has been positively evaluated by our team in IIJIF Journal Impact Factor Evaluation Process.
Journal Impact Factor [JIF-2016-17] JIF : 2.321
MANAGER

## வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்


**முதுகுளத்தூர் அட்டாவதானம் சரவணப்பெருமாள் கவிராயரும் அவர்தம் கவிப்புலமையும்**
சே.முனியசாமி | 65

**கிழக்கிந்திய தாந்திரீகப் பாடல்கள்**
முனைவர் ஆ.ஈஸ்வரன் | 78

**பெருங்கற்காலக் கற்பதுக்கைகள் - தொல்லியல் கள ஆய்வு**
முனைவர் க.பாலாஜி | 91

**எட்டிசேரி : பெருங்கற்காலச் சமூகத்தின் வாழ்விடம்**
முனைவர் ந.இராஜேந்திரன் | 108

**காலத்துக்குக் காலம் மாறும் கலைப்பாணிகள்**
முனைவர் ம.பாபு | 115

**பகுப்பாய்வு மெய்யியலில் மொழி : சமகால மெய்யியலை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு**
திரவியராசா நிரஞ்சினி | 121

**இலக்கணம் கற்றல் முறையில் வரைபடங்களின் பங்கு**
இரா.அருணா | 132

**ஒப்பீட்டு நோக்கில் தமிழ் - தெலுங்கு இலக்கணங்களும் இன்றய ஆய்வு போக்குகள்**
முனைவர் சி.சாவித்ரி | 138

**தண்டனைக் கொள்கைகளும் அவற்றின் நடைமுறைப் பொருத்தப்பாடும்**
அரியரெத்தினம் - அனேஜா | 148

**வளர்முக நாடுகளில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஏற்படுத்தும் விளைவுகள்**
வினாயகமூர்த்தி - வசந்தா | 163


## கணினித்தமிழ்


**இணையப் பயன்பாட்டுக் கற்றல்வழித் தமிழ் வளர்ச்சி**
முனைவர் ப.சண்முகராணி | 174


## நூல் மதிப்பீடு


**‘ஒடியன்’வழி இருளர்கள் : அறிமுகம்**
த.சத்தியராஜ் | 177


...

இனம்: பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் ISSN : 2455-0531 ஆகஸ்ட் 2018 மலர்:4 இதழ்:14 41

மதிப்பிடப்பெற்றது

# திருமூலரின் இரந்தார்க்கீதல்

முனைவர் பா.கலையரசி
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை,
சிதம்பரம்பிள்ளை மகளிர் கல்லூரி
மண்ணச்சநல்லூர், திருச்சிராப்பள்ளி.
ashokalai2011@gmail.com



*Abstract: Thirumanthiram is said to be as the origin of Saiva sithantha, Written by Thirumular. He elaborately Speaking about human ethics. The article aims to presenting I:thal Philosophy.*

சைவ சமய சாத்திர நூல்களுக்கெல்லாம் மூலமாகவும், முதன்மையானதாகவும் விளங்குவது திருமந்திரம். திருமுறைகளின் வரிசையில் பத்தாம் திருமுறையாக இடம்பெற்றுள்ள திருமந்திரத்தை இயற்றியவர் திருமூலர். இவர் பாடிய மூவாயிரம் பாடல்களுள் நூற்று அறுபத்திரண்டு பாடல்கள் தம்மை உளப்படுத்துவதாக அமைந்துள்ளன. இதன் வாயிலாக, திருமூலரின் வரலாற்றை ஓரளவு அறிய இயலுகிறது. இந்நோக்கத்தோடு அவர் பற்றிய தேடலைத் தொடங்கினால், 'வாழ்வாங்கு வாழ்ந்த வாழ்க்கைக்குரிய ஒரு தத்துவஞானி திருமூலர்' என்பது புலப்படும். அந்தவகையில், மனித அறிவின் எல்லைக்கு அப்பால் நின்று தனிமனித ஒழுக்கங்களை வலியுறுத்தி, வழிகாட்டும் திருமந்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'ஈதல்' எனும் திருமூலரின் தத்துவத்தை ஆய்ந்து தெளிவதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**அறத்தின் இரு பிரிவுகள்**

அறத்தை இரண்டு பெரும்பிரிவாகப் பிரிக்கலாம்.

(*i*) **பலருக்கும் பயன்படும் அறங்கள்**

[உதாரணம்]

அன்ன சத்திரம் அமைத்தல், கல்வி நிலையம் நிறுவுதல், திருக்கோயில் கட்டுதல் முதலியன.

(*ii*) **குறிப்பிட்ட ஒருவருக்கு வழங்குதல்**

இவ்விரண்டனுள் முதலில் கூறியதை 'ஒப்புரவு' என்றும், இரண்டாவதாகக் கூறியதை 'ஈகை' என்றும் விளக்குவார் வள்ளுவப் பெருந்தகை.

*"ஊருணி நீர்நிறைந் தற்றே"* [திருக்குறள் - 215]

என்றும்,

*"வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை"* [குறள்-221]

என்றும் திருவள்ளுவர் கூறியிருப்பவை இங்கே குறிப்பிடத்தக்கன.

**ஈ, தா, கொடு - விளக்கம்**

தமிழில் ஈ, தா, கொடு என்று ஒன்றுக்கொன்று நெருங்கிய பொருளுடைய மூன்று சொற்கள் உண்டு.

*"ஈதா கொடுவெனக் கிளக்கும் மூன்றும்*
*இரவின் கிளவி யாகிட னுடைய"* [தொல்.சொல்.444]

என்பது இலக்கணம். அஃதாவது, கொடுப்பவன் உயர்ந்தவன்; வாங்குபவன் தாழ்ந்தவன் - உயர்ந்தவன் தாழ்ந்தவனுக்கு, ஈந்தான் என்று கூற வேண்டும்.

கொடுப்பவன் தாழ்ந்தவன்; வாங்குபவன் உயர்ந்தவன் - உயர்ந்தவன் தாழ்ந்தவனைக் கொடு என்று கேட்டான் எனக் கூற வேண்டும்.

கொடுப்பவனும் வாங்குபவனும் சமமானவர்கள் - ஒருவரை ஒருவர் தா எனக் கேட்டார் என்று கூற வேண்டும்.

இதனை ஒன்றிற்கொன்றாக மாற்றிக் கூறிவிடாமல், இன்னின்ன சூழல்களில் தான் பயன்படுத்த வேண்டுமென்று எச்சரிக்கிறது தமிழிலக்கண மரபியல்.

**திருமந்திரத்தில் ஈதல்**

மானுட மதிப்புகளில் தலையாய ஒன்று ஈகைப் பண்பு. திருமந்திரத்தில் ஓர் அழகிய கேள்வி எழுகிறது. ஏன் ஈதல் வேண்டும்? ஈதல் என்பது என்ன? நான் என்னுடைய ஒரு பொருளைப் பிறருக்குக் கொடுப்பது தான் ஈதலா? ஏன் கொடுக்க வேண்டும்? இவ்வத்தனைக்கும் திருமந்திரம் பதில் தருகிறது.

ஈதல் என்று வரும்போது ஒரு பொருளை ஒருவருக்குக் கொடுக்கிறோம். அந்தப் பொருள் நமக்கு எப்படி வந்தது? நாம் உழைக்கிறோம். அதன் பயனாக நமக்கு வந்தது. நம் உழைப்பால் வந்த பொருளை உழைக்காத ஒருவருக்கு நாம் ஏன் கொடுக்க வேண்டும்? நம் நாட்டில் இன்று இரப்பவர்களின் தொகை பெருகி வருகிறது. பொருள் இல்லாமையினால் அல்ல; படித்திருப்பவர்களின் தொகை பெருகி வருவதால், அவர்களுக்குப் பொருள் கொடுக்க வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது.

**எல்லோரும் செய்ய வேண்டிய அறம் - ஈதல்**

நம் நாட்டில் இன்று இரவாதவரும் உண்டு; இரப்பவருமுண்டு. இரப்பது யாரும் விரும்பத்தக்கது அல்ல. ஈதல் என்பது பொருள் உள்ளவர்களுக்கு இருக்கக் கூடிய பண்பு. 'இரத்தல் தகாதது'; 'யாரும் செய்யக் கூடாதது'. ஆனால், இரப்பவர்களுக்கு ஈய வேண்டுமென்கிறார் திருமூலர்.

*"இரப்பவர்க் கீய வைத்தார்"* [திருவையாற்றுப் பதிகம்-383]

என்பார் திருநாவுக்கரசர்.

*"ஈஎன இரத்தல் இழிந்தன்று; அதன்எதிர்,*
*ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;"* [புறம்.204]

என்பது புறநானூறு.

நீரின் வேட்கையால் சாகக் கிடக்கும் பசுவிற்குச் சிறிது நீர் வேண்டி யாசித்தாலும் நாவுக்கு இழிவு தருவது அதைப் போல வேறெதுவும் இல்லை என்பதை,

*"ஆவிற்கு நீரென்று இரப்பினும்"* [குறள்-1066]

என விளக்குகிறது திருக்குறள்.

*"பிச்சைய தேற்றான் பிரமன் பரமாகவே"* [திருமந்திரம் - 1850]

என்று தாமாகச் சென்று பிறரிடம் யாசிப்பதைத் திருமூலர் வெறுத்தாலும், யாசிப்பவர்களுக்கு இரவாமல் இருக்க வேண்டாம் என அறிவுறுத்தவும் தவறவில்லை. எனவே, இரப்பவர்களுக்கு ஈதல் நன்றென்கிறார் திருமூலர்.

**ஈதலுக்கான அடிப்படைத் தேவை**

ஒவ்வொரு மனிதனுக்கும் இன்பமே நாதம். 'தான் பெற்ற இன்பம் இந்த வையகமும் பெற வேண்டும்' என்று நினைக்கும் தனிச்சிறப்பு மனிதனுக்கு மட்டுமே உண்டு. இந்த நினைவு இருந்தால் மட்டுமே ஈதல் செவ்வையாக நடைபெறும். எனவே, ஈதலின் அடிப்படைத் தேவை மனம் பக்குவப்பட வேண்டியதே ஆகும். மனம் பக்குவப்பட முதலில், தமக்கும் உலகத்தாருக்கும் உள்ள தொடர்பு, தமக்கும் பிறருக்கும் உள்ள தொடர்பு என்று பாகுபடுத்திப் பார்க்கும் மனநிலையை உணர வேண்டும். அவ்வாறு உணர்ந்த தத்துவஞானியான திருமூலர்,

*"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை*
*யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை*
*யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி*
*யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே"* [திருமந்திரம்-109]

என வலியுறுத்தி வழிகாட்டுகிறார். அஃதாவது, பிறரிடத்தில் இனிமையாகப் பேசுதல் போன்ற மனப்பண்பு வேண்டும். எடுத்த எடுப்பிலேயே கருத்தாழத்தில் இறங்கியிருப்பது திருமந்திரத்தின் சிறப்பெனலாம்.

*"ஈவது விலக்கேல்"* [ஆத்திச்சூடி-4]

என்பது ஔவையின் கருத்து. அதுமட்டுமின்றி,

*"அற்றுநின் றாருண்ணும் ஊணே அறனென்னுங்*
*கற்றன போதங் கமழ்பவர் மானிடர்*
*உற்றுநின் றாங்கொரு கூவற் குளத்தினிற்*
*பற்றிவந் துண்ணும் பயன்அறி யாரே"* [திருமந்திரம்-110]

என்கிறார் திருமூலர். தாம் கற்றவற்றுள்ளே, 'மக்களுக்கு உணவு கொடுத்தல் தான் ஈதல்' என்றும் அறிவுறுத்துகிறார். மேலும், செல்வம் தழுவிய நாளில் ஈயாமல் இவ்வுலக வாழ்வைப் போக்குவதில் எவ்விதப் பயனும் இல்லை என்பதை,

*"தழுக்கிய நாளில் தருமமுஞ் செய்யீர்*

*விழித்திருந் தென்செய்வீர் வெம்மை பரந்து"* [திருமந்திரம்-111]

எனும் பாடலால் விளக்குகிறது திருமந்திரம்.

**பயனற்ற ஈதல்**

இரந்தார்க்கு ஈய வேண்டுமென்பதைத் திருமூலர் வலியுறுத்தினாலும், ஒழுக்கத்தில் குறைந்தோர்க்கு ஈவதைத் தடுக்க வேண்டுமென்றும், ஒழுக்கமற்றோரின் ஈகையை மறுக்க வேண்டுமென்றும் கூறி மனிதர்களை நெறிப்படுத்துகிறார்.

*"கோல வறட்டைக் குனிந்து குளகிட்டு*
*பாலைக் கறந்து பருகுவ தேயொக்கும்*
*சீலமும் நோன்பும் இலாதவர்க் கீந்தது*
*காலங் கழிந்த பயிரது ஆகுமே"* [திருமந்திரம்-488]

என்பது பயனற்ற ஈதலையும்,

*"செல்வங் கருதிச் சிலர்பலர் வாழ்வெனும்*
*புல்லறி வாளரைப் போற்றிப் புலராமல்"* [திருமந்திரம்-126]

என்பது யாரிடம் ஈகையைப் பெறக்கூடாது என்பதையும் எடுத்துக்காட்டுகிறது. திருமூலரின் இந்நெறிப்படுத்துதல் மக்கட் சமூகத்தின் மீது அவருக்கிருந்த அக்கறையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

**முடிவுரை**

மனிதன் உழைக்கிறான்; உணர்கிறான். ஆதலால், 'நான் உழைக்கிறேன்; பிறருக்கு ஏன் கொடுக்க வேண்டும்?' என்று எண்ணுகிறான். இந்த எண்ணம் உழைப்பின்வழி நிற்கக் கூடியது. உழைப்பால் மனிதன் பெறுவது அறிவு விளக்கம்; இதை உணராது 'எனக்குரியது' என்றெண்ணுவது தவறான அணுகுமுறை ஆகும். இந்த அழுக்கு மனத்தை விட்டு நீங்கினாலொழிய அறிவு வளராது. இதைப் போக்குவதற்கான வழியே, 'இரந்தார்க்கீதல்'.

**துணைநின்றவை**


- இராமநாதபிள்ளை, ப. (வி.ஆ), சிதம்பரனார், அ., (கு.ஆ), திருமூலரின் திருமந்திரம் மூவாயிரம், இரு பகுதிகள், கழக வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு - 1942.
- கோவிந்தராசன், சி.ர., (உ.ஆ), 2002(மு.ப.), ஔவையார் அருளிய அறநூல்கள் மூலமும் உரையும், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை
- கௌமாரீஸ்வரி எஸ்., 2005(மு.ப.), தொல்காப்பியம் (பொருளதிகாரம்) இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை
- துரைசாமிப்பிள்ளை, ஔவை.சு.,(உ.ஆ.), 1956(மு.ப.) புறநானூறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- ..., 1963, திருநாவுக்கரசர் தேவாரம் (ஆறாம் திருமுறை), ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம், மயிலாடுதுறை, முதற்பதிப்பு - 1963.
- ..., 1962, திருக்குறள் - பரிமேலழகர் உரை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை,